WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 07.07.2025

CORAM

THE HONOURABLE MR. JUSTICE M.SUNDAR
and
THE HONOURABLE MR. JUSTICE HEMANT CHANDANGOUDAR

W.P.No.30891 of 2022
&
W.M.P.No.30288 of 2022

Chetiannan @ Chettiya Gounder ... Petitioner

vs.

1. The District Collector
   Salem District at Salem

2. The Tahsildar
   Gangavalli Taluk, Salem District

3. The Revenue Inspector
   Gangavalli, Gangavalli Post & Taluk
   Salem District ... Respondents

Writ Petition filed under Article 226 of the Constitution of India to issue a writ of mandamus directing the 1st respondent to hear the stay petition dated 14.11.2022 filed under Section 10-B of TN Land Encroachment Act, 1905 along with the appeal dated 14.11.2022 filed under Section 10 of the TN Land Encroachment Act, 1905 preferred against the order of eviction dated 01.11.2022 issued by the second respondent under Section 6 of the Tamil Nadu Land Encroachment Act, in respect of the lands



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



comprised in Survey No.354/3 measuring 0.38 cents, Survey No.354/4 measuring 0.13 cents and Survey No.354/6 measuring 0.40 cents totalling to 0.91 cents situate at Naduvalur Village, Gangavalli Taluk, Salem District, within the time fixed by this Court.

| | | |
|---|---|---|
| For petitioner | : | Mr.K.Premkumar |
| For Respondents | : | Mr.K.Suresh<br>Government Advocate |

**ORDER**

[Order of the Court was made by M.SUNDAR, J.]

Writ petitioner suffered an order dated 01.11.2022 made by R2 under Section 6 of 'the Tamil Nadu Land Encroachment Act, 1905 (Tamil Nadu Act III of 1905)' {hereinafter 'said 1905 Act' for the sake of brevity} after show-causing writ petitioner vide a notice under Section 7 of said 1905 Act signed by R3 on 17.10.2022.

2. Assailing the afore-referred 01.11.2022 order of R2 made under Section 6 of said 1905 Act, writ petitioner has filed a statutory appeal dated 14.11.2022. To be noted, the Appellate Authority is R1. Along with the statutory appeal, writ petitioner has taken out a stay petition also dated 14.11.2022 under Section 10-B of said 1905 Act.

3. Scanned reproduction of the appeal together with stay petition



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

dated 14.11.2022 as placed before us (together with postal acknowledgement) is as follows:

Re-Presented

50

1

<u>மாண்பமை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சமூகம், சேலம்</u>

மேல்முறையீடு தகை.எண். /2022

மசட்டியண்ணன்,
த/பெ. லேட். பழனிவேல்,
தெற்கு காட்டுக்கொட்டாய், -- மேல்முறையீட்டாளர்
நடுவலூர் அஞ்சல்,
கெங்கவல்லி வட்டம்,
சேலம் மாவட்டம்.

இடையே

1. திரு. வட்டாட்சியர் அவர்கள்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   கெங்கவல்லி அஞ்சல் மற்றும் வட்டம்,
   சேலம் மாவட்டம்.

--- எதிர்மனுதாரர்கள்

2. திரு. வருவாய் ஆய்வாளர் அவர்கள்,
   கெங்கவல்லி,
   கெங்கவல்லி அஞ்சல் மற்றும் வட்டம்,
   சேலம் மாவட்டம்.

<u>வட்டாட்சியர் கெங்கவல்லி அவர்கள் நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 6 ன் கீழ் 01.11.2022 ம் தேதியில் கொடுத்துள்ள எவிக்ஸென் நோட்டீசிற்கு எதிராக மேல்முறையீட்டாளர் பணிவுடன் தாககல் செய்யும் மேல்முறையீடு</u> U/Sec 10

1) நடுவலூர் கிராமம், ச.எண் 354/3 விஸ் 0.15.0 ஹெக், ச.எண். 354/4 விஸ் 0,05.5 ஹெக் மற்றும் ச.எண். 354/6 விஸ் 0,16.0 ஹெக் நிலங்கள் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களாகும்.

2) ஷ நிலங்களை மேல்முறையீட்டாளர் எக்காலத்திலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. கடந்த 05.10.1970 ம் தேதியன்று மேல்முறையீட்டாளரின் தகப்பனார் பழனிவேல் கவுண்டரும் அவரது சகோதரர் செங்கோடு கவுண்டரும் ஒரு பதிவு செய்யப்படாத கிரய முச்சலிக்கா மூலம் கிரயமும், சுவாதீனமும் பெற்றார்கள். அது முதல் அவர்கள் யாருடைய இடையூறும், தலையீடும் இல்லாமல் அமைதியான முறையில் ஷ நிலங்களை அனுபோகம் செய்து வந்தார்கள். மேல்முறையீட்டாளர் தந்தையின் சகோதரர் இறந்துவிட்ட பிறகு மேல்முறையீட்டாளரின் தகப்பனார் பெரும்பொருள்

56



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



செலவிட்டு ஷ நிலங்களை சமப்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற நிலங்களாக மாற்றி அருகே உள்ள ச.எண். 353/15 பட்டா நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து நிலத்தடி பைப்லைன் மூலம் தண்ணீர் எடுத்து தென்னை மரக்கன்றுகளை நட்டும் இதர பயிர் வகைகளை செய்தும் வந்தார். 1970 ஆம் ஆண்டில் இருந்து ஷ நிலங்களுக்கு தீர்வை செலுத்தி வந்தார். மேல்முறையீட்டாளரின் சிற்றப்பா செங்கோடு கவுண்டரின் வாரிசுகளான வசந்தா, ராஜாமணி மற்றும் ரமேஷ் ஆகியோர் கடந்த 15.04.1997 ல் மேல்முறையீட்டாளர் பெயருக்கு ஷ தரிசு நிலங்களைப் பொருத்து பதிவு செய்யப்படாத தரிசு நில சுவாதீனப்பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள்.

3) மேல்முறையீட்டாளரின் தந்தையார் 2006 ஆம் ஆண்டில் காலமான பிறகு ஷ நிலங்கள் அனைத்தும் மேல்முறையீட்டாளர் அனுபோக சுவாதீனத்தில் இருந்து வருகிறது. ஷ நிலங்களுக்கு மேல்முறையீட்டாளர் தீர்வை செலுத்தி வருகிறார். மேல்முறையீட்டாளர் பெரும் பொருள் செலவிட்டு வாழை, தென்னை, மா, மாதுளை, எலுமிச்சை, கொய்யா, சவுண்டு முதலான மரவகைப் பயிர்களையும் மல்பரி, மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிகிழங்கு, சேனைக்கிழங்கு, தீவணப்புல் முதலான விவசாய பயிர்களையும் செய்து வருகிறார். ஷ நிலங்களுக்கு சொட்டு நீர் பாசன வசதி செய்துள்ளார்.

4) ஷ நிலங்களை மேல்முறையீட்டாளருக்கு 05.10.1997 ல் வெண்ணிலை கிரயம் மூலம் சுவாதீனம் செய்து கொடுத்த நபர்களான சின்னிய மூப்பர் மற்றும் காங்கமுத்து பூசாலி ஆகியோர்கள் ஷ நிலங்களை அனுபோகம் செய்து வந்தபோதும் ஷ நிலங்கள் வழியாக 15 அடி அகலத்தில் சமத்துவபுரம் To நடுவலூர் செல்லும் மெயின்ரோட்டில் இருந்து வடபுறமாக வண்டித்தடம் அமைத்து போகவர பயன்படுத்தி வந்தபோதும் அதன்பிறகு ஷ நிலங்களும் ஷ வண்டித்தடமும் மேல்முறையீட்டாளரது அனுபோக சுவாதீனத்திற்கு வந்தபோதும் அரசாங்கம் உட்பட யாரும் எவ்வித ஆட்சேபணைகளையும் செய்யவில்லை. 1970 க்கு முன் இருந்த அனுபோகமும், அதற்கு பின் இருந்து வரும் அனுபோக சுவாதீனமோ எக்காலத்திலும் ஆட்சேபணைக்குரிய அனுபோகமாக கருதப்படவில்லை. தீர்வை ஏற்பட்ட தரிசு நிலம் என்பதால் ஆட்சேபணை அற்ற அனுபோகங்களாகவே கருதப்பட்டு வந்துள்ளது.

5) ஷ நிலங்கள் அனைத்தும் 1970 க்குப் முன்பிருந்தும் 1970 க்கு பின்பும் நாளது

57

https://www.mhc.tn.gov.in/judis

HIGH COURT OF JUDICATURE MADRAS
सत्यमेव जयते
WEB COPY



தேதிவரை யாருடைய இடையூறும், தலையீடும் இல்லாமல் தொடர்ந்து அமைதியான முறையில் வெளிப்படையாக ஊரும் உலகும் அறிய அரசாங்க அலுவலர்களுக்கு தெரிந்தே நீடனுபோக உரிமையாளர்கள் என்ற நிலையில் மேல்முறையீட்டாளரும், அவருக்கு முன்பு மேல்முறையீட்டாளர் தந்தையும் அவரது சகோதரரும் அதற்கு முன்பு ஷ சின்னிய மூப்பர் மற்றும் காங்கமுத்து பூசாலி ஆகியோர்களும் அனுபோகம் செய்து வந்ததால் மேல்முறையீட்டாளருக்கு ஷ நிலங்கள் மீது அரசாங்கத்திற்கு எதிராக நீடனுபோக பாத்தியம் சித்தரித்துள்ளது. சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள 30 ஆண்டு காலத்திற்கு மேலாக (more than statutory period) அமைதியான தொடர் அனுபோகம் இருந்து வருவதால் ஷ நிலங்களின் மீது அரசாங்கத்திற்குரிய உரிமையும் பாத்தியமும் காலவரையறை சட்டப்படிக்கு அற்றுப்போய் விட்டது. ஷ நிலங்கள் மீது மேல்முறையீட்டாளருக்கு நீடனுபோக பாத்திய உரிமை ஏற்பட்டுள்ளது. ஷ நிலத்தின் நீடனுபோக உரிமையாளர் என்ற எண்ணத்துடன் தான் இத்தனை ஆண்டு காலம் அமைதியான முறையில் அனுபோகம் செய்து வருகிறார்.

6) ஷ நிலம் அரசாங்கத்திற்கோ பொதுப்பயன்பாட்டிற்கோ பொது உபயோகத்திற்கோ (அல்லது) பஞ்சாயத்து பயன்பாட்டிற்கோ உபயோகத்திற்கோ ஒருபோதும் தேவைப்படவில்லை. அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் இதுநாள்வரையிலும் எடுக்கப்படவில்லை. ஷ நிலம் நடுவலூர் கிராமத்தில் இருந்து சுமார் 2 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. ஷ நிலங்கள் அருகே பொது குடியிருப்பு பகுதிகள் யாதொன்றும் கிடையாது. ஷ நிலங்களை சுற்றிலும் விவசாய நிலங்களே அமைந்துள்ளன.

7) மேல்முறையீட்டாளருக்கு மேற்கண்ட வகையில் நீடனுபோக மூலம் உரிமையான ஷ நிலத்தினை மேல்முறையீட்டாளர் கவர்மெண்டாருடைய சொத்தாகிய நிலத்தினை அனுமதியின்றி அனுபவத்தில் வைத்துக் கொண்டிருப்பதாக தெரியவருகிறபடியால் அபராதம் விதிப்பது அல்லது அப்புறப்படுத்துவதற்குள்ளாக்கி மகசூல், விளைபொருள், கட்டுக்கோப்பு மற்றும் ஷ நிலத்தின்மேல் சேர்த்து வைத்திருக்கும் வஸ்துக்கள் ஆகிய இவைகளை 6 வது பிரிவின்படி பறிமுதல் செய்வதும் ஏன் கூடாது என்பதற்கு காரணம் காட்டும்படி 7 வது பிரிவின்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டது எவ்வித முகாந்திரமும் அற்ற செயல்பாடாகும்.

58

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY





8) நடுவலூர் கிராமம், புல எண் 354 ஐ 354/2, 354/3, , 354/4, 354/5, 354/6, 354/8 மற்றும் 354/10 மற்றும் 354/11 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்கள். 354/10 மற்றும் 354/11 நிலங்கள் குட்டை புறம்போக்கு நிலங்களாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஷ நிலங்களை சட்ட விரோதமாக தீர்வை ஏற்பட்ட தரிசாக மாறுதல் செய்து ச.எண்கள். 354/10 மற்றும் 354/11 நிலங்களுக்கு நடுவலூர் கிராமம் சுப்ரமணிய கவுண்டர் மகன் துரைசாமி வகையறாக்களுக்கு கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதன் பட்டா எண்கள் 424 மற்றும் 340 ஆகும்.

9) புல எண்கள். 354/2, 354/5 மற்றும் 354/8 ஆகியவைகள் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களாக வைபாடு செய்யப்பட்டுள்ளன. புல எண். 354/2 மற்றும் 354/5 க்கு அம்பாயிரமூப்பன் மகன் சின்னிய மூப்பன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதன் பட்டா எண் 397 ஆகும். புல எண். 354/8 ல் உள்ள தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்திற்கு சுப்பிரமணிய கவுண்டர் வகையறாக்கள் பெயருக்கு கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதன் பட்டா எண். 424 ஆகும்.

10) மேற்கண்ட விபரங்கள் படிக்கு தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் 30 ஆண்டு காலத்திற்கு மேலாக மேல்முறையீட்டாளர் அனுபோக சுவாதீனத்தில் இருந்து வரும் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களான ச.எண்கள். 354/3, 4, 6 நிலங்களுக்கு இதுநாள் வரையிலும் மேல்முறையீட்டாளருக்கு பட்டா வழங்கப்படவில்லை. ஒரே வகைப்பாட்டில் அமைந்துள்ள நிலங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் மேல்முறையீட்டாளருக்கு மட்டும் பட்டா வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது மேல்முறையீட்டாளரின் ஜீவாதார சட்ட உரிமைக்கு எதிராக உள்ளது.

11) 17.10.2022 தேதியிட்ட அறிவிப்பு false, frivolous, vexatious, unsustainable in law and on facts. அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகளும், காரணங்களும் தவறானவைகள். சட்டப்படி செல்லத்தக்கதல்ல. ஷ அறிவிப்பு உண்மைக்குப் புறம்பானது. ஷ நிலங்கள் மேல்முறையீட்டாளருக்கு நீடனுபோகம் மூலம் உரிமையானது. அரசுக்கு உரிமையான நிலங்கள் கிடையாது. ஷ நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்கள் கிடையாது. மேல்முறையீட்டாளர் ஆக்கிரமிப்பாளர் கிடையாது, உரிமையாளர் ஆவார். நில ஆக்கிரமிப்பு சட்டம் மேல்முறையீட்டாளருக்கு பொருந்தாது. அதன்படி



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY





54

ஷ நிலங்களில் இருந்து மேல்முறையீட்டாளரை அப்புறப்படுத்த முடியாது. மகசூல், விளைபொருட்கள் வஸ்துக்கள் எதையும் பறிமுதல் செய்யவும் சட்டத்தில் இடமில்லை.

12) 1970 ஆம் ஆண்டில் இருந்து நிலங்களை சமப்படுத்தி, மரவகைகளை நடவு செய்து, நிலத்தடி பைப்லைன் அமைத்து, போகவர 15' அகலத்தில் வண்டிப்பாதை அமைத்து பல்வேறு விவசாயப் பயிர்களை செய்து வருகிறார். இதுவரை சுமார் ரூ. 10,00,000/– வரை முதலீடு செய்துள்ளார். சட்ட விரோதமாக சட்ட திட்டங்களுக்கு புறம்பாக மேல்முறையீட்டாளரை ஷ நிலத்திலிருந்து அப்புறப்படுத்தினாலும் 65 பலன் தென்னை மரங்கள், 50 பலன் மாமரங்கள், 1 எலுமிச்சை மரம், 4 மாதுளை மரங்கள், 200 சவுண்டு மரங்கள், 4 பலன் கொய்யா மரங்கள் மற்றும் 150 பலன் வாழை மரங்களையும், 3 பப்பாளி மரங்களையும், மாமூல் வண்டிப்பாதையையும் அப்புறப் படுத்தினாலும் மேல்முறையீட்டாளருக்கு ரூ. 10,00,000/– வரை நஷ்டம் ஏற்பட்டுவிடும். அதுமட்டுமல்லாமல் மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்டுள்ள மனவேதனை மற்றும் மனஉளைச்சலுக்கும் மானநஷ்டத்திற்கும் ரூ. 10,00,000/– வரை அரசாங்கம் செலுத்த வேண்டியிருக்கும். சட்டவிரோதமாகவும், பலாத்காரமாகவும் மேல்முறையீட்டாளரை ஷ நிலத்திலிருந்து அப்புறப்படுத்தினால் ஆக மொத்தம் ரூ. 30,00,000/– வரை அரசாங்கம் அவருக்கு நஷ்டஈடு வழங்க நேரிடும். ஷ பலன் தென்னை மரங்கள், மாமரங்கள், மாதுளை மரங்கள், சவுண்டு மரங்களை வெட்டி அப்புறப்படுத்தினால் அவருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்களும் ஈடு செய்ய முடியாத இழப்பீடுகள் ஏற்படுவதுடன் அரசாங்கத்திற்கும் இழப்புகள் ஏற்படும். இயற்க்கைக்கும் குந்தகம் ஏற்பட்டுவிடும்.

13) ஷ நடுவலூர் கிராமம் துரைசாமி மகன் பெரியசாமி (எ) பெரியண்ணன் –1, ஷ யார் குமாரர் செந்தில் –2, சின்னசாமி குமாரர் காங்கமுத்து –3 ஆகியோர் கடந்த 27.04.2019 ல் ஷ நிலங்களை மேல்முறையீட்டாளர் அமைதியாக அனுபோகம் செய்துவருவதை இடையூறு செய்த காரணத்தால் மேல்முறையீட்டாளர் ஷ நபர்கள் மீது ஆத்தூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 116/2019 ல் வழக்கு தாக்கல் செய்தார். ஷ வழக்கில் நியமனம் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். ஷ வழக்கில் அரசாங்கத்தை தரப்பினர்களாக சேர்க்கும்படி ஷ பிரதிவாதிகள் I.A.No. 7/2019 ல் தாக்கல் செய்துள்ள மனு நிலுவையில் இருந்து வருகிறது.

60



https://www.mhc.tn.gov.in/judis

HIGH COURT OF JUDICATURE MADRAS
सत्यमेव जयते
WEB COPY



6

14) இந்நிலையில் கடந்த 22.07.2019, 18.12.2021. 17.01.2022. 28.01.2022, 29.06.2022, 30.06.2022, 05.09.2022, 06.09.2022, 08.09.2022, 05.10.2022 ஆகிய தேதிகளில் ஷ நபர்கள் பல்வேறு சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டார்கள். மேல்முறையீட்டாளரின் மனைவி மற்றும் தாயாரை மானபங்கப்படுத்தினார்கள். கொலைமிரட்டல் விடுத்தார்கள். மேல்முறையீட்டாளர் நிலத்தில் சட்டவிரோதமாக புதிய பாதை அமைத்தார்கள். இது குறித்து காவல்துறை மூலம் புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் காவல்துறை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. கடந்த 30.06.2022 ல் கெங்கவல்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மேல்முறையீட்டாளர் தாயாரிடம் கெங்கவல்லி SI வாக்குமூலம் பதிவு செய்தார். அதனை மேல்முறையீட்டாளர் அவரது மொபைல் போனில் பதிவு செய்தார். மேல்முறையீட்டாளரின் மொபைல் போனை பிடுங்கி வைத்துக்கொண்டு SI அவரை மிரட்டினார். மேல்முறையீட்டாளரின் தாயார் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்ய மறுத்தார். மேல்முறையீட்டாளர் மேல் அதிகாரிகளுக்கு புகார் செய்தார். இந்நிலையில் மேல்முறையீட்டாளர் மாநில மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுத்தார். அதனை தொடர்ந்து ஷ எதிரிகள் மீதும், அவர்களுக்கு உடந்தையாக உள்ள காவல் உதவி ஆய்வாளர் P.S.பிரபாகரன் மீதும் ஆத்தூர் J.M.No. II கோர்ட்டில் 10.09.2022 ல் தனி பிராது கொடுத்துள்ளார்.

15) இந்நிலையில் 06.10.2022 ல் மேல்முறையீட்டாளருக்கு எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காமல் தாசில்தார் கெங்கவல்லி, நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கெங்கவல்லி காவல்நிலைய உதவி ஆய்வாளர் ஆகியோர்களும் ஷ நிலத்தினுள் சட்ட விரோதமாக அத்துமீறி நுழைந்து ஷ நிலங்களில் இருந்து மேல்முறையீட்டாளரை அப்புறப்படுத்தப்போவதாகவும், ஷ நிலங்களை சுற்றிலும் வேலி அமைக்கப் போவதாகவும் மிரட்டினார்கள்.

6) ஷ வழக்கின் பிரதிவாதிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துக்கொண்டு கெங்கவல்லி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் வருவாய்துறை உதவியுடன் மேல்முறையீட்டாளரை ஷ நிலத்திலிருந்து அப்புறப்படுத்தவும் பழிவாங்கவும் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளார். அவர் மீது மனித உரிமை ஆணையம் மற்றும் ஆத்தூர் J.M.No. II கோர்ட்டில் மேல்முறையீட்டாளர் நடவடிக்கை எடுத்து வருவதால் அவர் மேல்முறையீட்டாளர் மீதும், அவரது குடும்பத்தார் மீதும் குரோத எண்ணம்

61



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



56



கொண்டுள்ளார். ஷ சிவில் வழக்கின் பிரதிவாதிகள் மற்றும் கெங்கவல்லி காவல் உதவி ஆய்வாளர் தூண்டுதல் அடிப்படையில் தான் மேல்முறையீட்டாளருக்கு பிரிவு 7 ன் கீழ் மேல்முறையீட்டாளரை பழிவாங்கும் கெட்ட எண்ணத்துடன் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பது தான் உண்மை.

17) இந்நிலையில் மேல்முறையீட்டாளர் கடந்த 17.10.2022 ல் ஆத்தூர் PDMC ல் ஷ பெரியசாமி (எ) பெரியண்ணன் வகையறாககள் மீதும் அரசாங்கத்தின் மீதும் கெங்கவல். காவல் உதவியாளர் மீதும் சிவில் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கும் பொருட்டு நிலுவையில் உள்ளது. ஷ வழக்கானது மேல்முறையீட்டாளரின் நீடனுபோக பாத்தியத்தை நிர்ணயம் செய்யவும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் மேல்முறையீட்டாளருக்கு உரிமையான நிலத்தை சுற்றிலும் வேலி அமைக்கக் கூடாது எனவும் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

18) ஷ நிலங்கள் சம்மந்தமாக ஷ இருவழக்குகள் சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நீடனுபோக பாத்திய நிர்ணயம் குறித்த பரிகாரம் கோரப்பட்டுள்ளதால் முக்கிய சிவில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. அதனை தீர்க்கும் அதிகாரம் சிவில் நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது. நிலங்களின் உரிமைப் பிரச்சனை சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள போது பிரிவு 7 ன் கீழ் அறிவிப்பு கொடுப்பது! சட்ட விரோதமாகும் உள் நோக்கம் கொண்டது. பழிவாங்கும் நோக்கம் கொண்டதாகும். உரிமை பிரச்சனை குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் சிவில் நீதிமன்றத்திற்கு உள்ளதால் அதனை சிவில் நீதிமன்றத்தின் முடிவுக்கு விடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக உள்ளது. சிவில் வழக்கு நிலுவையில் உள்ள போது மேல்முறையீட்டாளரை வழக்குச் சொத்தில் இருந்து அப்புறப்படுத்த முடியாது. பிரிவு 7 ன் கீழ் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு "abuse of process of court" மற்றும் "contempt of court" நடவடிக்கைக்கு உட்பட்டதாகும்.

19) மேற்கண்ட சூழ்நிலையில் கெங்கவல்லி காவல்நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் ஷ சிவில் வழக்கு பிரதிவாதிகளின் தூண்டுதல் பெயரில் மேல்முறையீட்டாளரை பழிவாங்கும் கெட்ட நொக்கத்துடன் விடுக்கப்பட்டுள்ள பிரிவு 7 அறிவிப்பு திரும்ப பெறப்பட வேண்டியதும் ஷ சிவில் வழக்குகள் முடியும் வரை மேல்முறையீட்டாளருக்கு

62



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



5X



நீடனுபோக பாத்தியம் மூலம் உரிமையான நிலங்களில் இருந்து சட்ட விரோதமாக அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை கைவிட வேண்டியதும் நீதியின் நலனுக்கும் சட்ட தர்ம நியாயங்களுக்கும் உகந்ததாக உள்ளது. நீடனுபோக உரிமை மற்றும் காலவரைச்சட்டம் மூலம் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்கள் மீது அரசுக்கு ஏற்பட்டிருந்த உரிமை அற்றுப் போய்விட்டதால் மேல்முறையீட்டாளரை அப்புறப்படுத்தும் உரிமை வருவாய்த்துறைக்கு கிடையாது.

20) கடந்த 1970 ம் ஆண்டில் இருந்து ச.எண்கள். 354/3, 4, 6 ல் உள்ள நிலங்களில் மேல்முறையீட்டாளர் 30 ஆண்டு காலத்திற்கு மேலாக (more than the statutory period) அமைதியான தொடர் அனுபோகத்தில் இருந்து வருவதால் அவருக்கு நீடனுபோக பாத்தியம் சித்தரித்துள்ளது. ஷ 30 ஆண்டு காலத்திற்குள் அரசாங்கம் மேல்முறையீட்டாளரை ஷ நிலங்களில் இருந்து வெளியேற்ற எவ்வித நடவடிக்கையும் காலவரம்பு சட்டம் 1963 ஆர்ட்டிக்கல் 112 ன்படி எடுக்கப்படாததால் அரசாங்கம் ஷ நிலங்களின் உரிமையை இழந்துள்ளது. அதனால் நில ஆக்கிரமிப்புச் சட்டம் பிரிவு 6, 7 மற்றும் இதர பிரிவுகள் ச.எண்கள். 354/3, 4, 6 ல் உள்ள நிலங்களுக்கு பொருந்தாது. காலவரம்பு சட்டம் 1963 ஆர்ட்டிக்கல் 112 ன்படி அரசாங்கம் ஷ நிலங்களைப் பொருத்து அதன் உரிமையை இழந்துள்ளதால் பிரிவு 7 மற்றும் 6 ன் கீழ் வழங்கப்பட்டுள்ள நோட்டீஸ் சட்டப்படிக்கு செல்லத்தக்கதல்ல. அதனால் ஷ நிலங்களைப் பொருத்து என் உரிமையை விளம்புகை செய்யக்கோரி ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்து நம்பருக்காக நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 52 ஆண்டுகளாக ஷ நிலங்களைப் பொருத்து மேல்முறையீட்டாளரும் அவரது தந்தையும் தீர்வை செலுத்தியதை ஏற்று எவ்வித நடவடிக்கை எடுக்காமல், தற்சமயம் அவசரமாக நில ஆக்கிரமிப்பு சட்டத்தில் நடவடிக்கை எடுப்பதால் அரசாங்கம் எஸ்டோப்பல் செய்யப்படுகிறது (The Government is estopped from evicting the Appellant).

21) மேற்கண்ட சூழ்நிலைகளில் 2 ம் எதிர்மனுதாரர் கடந்த 17.10.2022 ம் தேதியில் நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 7 ன் கீழ் உண்மைக்கு புறம்பாக அறிவிப்பு கொடுத்துள்ளார். ஷ அறிவிப்புக்கு மேல்முறையீட்டாளர் பதிலறிவிப்பு கொடுத்துள்ளார்.

22) இந்நிலையில் 01.11.2022 ம் தேதியன்று 1 ம் எதிர்மனுதாரர் நில அபகரிப்பு சட்டம்

63



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY





58

பிரிவு 6 ன் கீழ் எவிக்ஸென் நோட்டீஸ் கொடுத்துள்ளார். மேற்படி தேதியிட்ட நோட்டீசில் கூறப்பட்டுள்ள சங்கதிகளும், காரணங்களும் தவறானவைகள், சட்டப்படி செல்லத்தக்கதல்ல. ஷ நோட்டீஸ் உள்மைக்கு புறம்பானது. மேற்படி நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்கள் கிடையாது. நான் ஆக்கிரமிப்பளர் கிடையாது. உரிமையாளர் ஆவேன். ஆனால் கடந்த 04.11.2022 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு தான் நோட்டீஸ் மேல்முறையீட்டாளர் வசம் கொடுக்கப் பட்டுள்ளது. 01.11.2022 ம் தேதியன்று 1 ம் எதிர்மனுதாரரால் கையெழுத்திடப்பட்டு 04.11.2022 ம் தேதி மேல்முறையீட்டாளர் வசம் நோட்டீஸ் கொடுத்தது சட்ட விரோதமானது. சட்டத்திற்கு புறம்பானது மட்டுமன்றி இயற்கை நீதிக்கும் புறம்பானது. மேல்முறையீட்டாளர் அவர் நரப்பு வாதங்களை கூறவிடாமல் அவசரமாக வெளியேற்ற நினைப்பது இயற்கை நீதிக்கு புறம்பானது ((Against the principles of natural justice "Audi Alteram partem").

23) மேற்கண்ட சூழ்நிலையில் நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 7 மற்றும் 6 ன் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டியதும், கைவிட வேண்டியதும் நீதியின் நலனுக்கு உகந்ததாக உள்ளது. மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் ஷ நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது.

24) ச.எண்கள். 354/3, 4, 6 க்கு சம்மந்தப்பட்ட வழிகாட்டி மதிப்பீட்டின் படி ஷ நிலத்தை மதிப்பீடு செய்து அந்த தொகையினை மேல்முறையீட்டாளரை செலுத்தும்படி அரசாங்கம் உத்திரவிட்டாலும் அதை செலுத்த மேல்முறையீட்டாளர் தயாராக இருந்து வருகிறார். ஷ நிலத்தை பொருத்து அரசாங்கம் மேல்முறையீட்டாளருக்கு அடமானம் வழுங்குவதை பரிசீலனை செய்யுமாறும் பணிவுடன் பிரார்த்திக்கின்றார்.

25) கடுமையான ஆட்சேபனைகளுக்கு உட்பட்ட ஏரிப்புறம் போக்கு, ஆற்றுப் புறம்போக்கு, நீர்நிலைப் புறம்போக்கு, குட்டை புறம்போக்கு, ஓடைப்புறம்போக்கு, கோவில் புறம்போக்கு, மழைநீர் ஊற்றுப் புறம்போக்கு முதலான ஆக்கிரமிப்புகள் நடுவலூர் கிராமத்தில் நிறைய உள்ளன. அவைகளை விட்டு விட்டு ஆட்சேபனை ஏதுமற்ற தீர்வை ஏற்பட்ட தரிசு நில நீடனுபோக உரிமைகளை புறம்தள்ளிவிட்டு என்னை அப்புறப்படுத்த நினைப்பது சட்டதர்ம நியாயங்களுக்கும் புறம்பானது.

64



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



59

10

ஆகவே மாண்பமை மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் அவர்கள், தயவு கூர்ந்து ச.எண்கள். 354/3, 4, 6 ல் உள்ள நிலங்களின் மீது மேல்முறையீட்டாளருக்கு நீடனுபோகம் சித்தரித்துள்ளதாலும், காலவரம்பு சட்டம் 1963 ஆர்ட்டிக்கல் 112 ன்படி அரசாங்கம் அதனுடைய உரிமையை இழந்துவிட்ட காரணத்தினாலும், நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 7 மற்றும் 6 மேல்முறையீட்டாளருக்கு பொருந்தாது என்பதாலும், ஷ ச.எண்களில் இருந்து மேல்முறையீட்டாளரை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை கைவிட்டு நீதி வழங்குமாறு பணிவுடன் பிரார்த்திக்கின்றார்.

மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர்

மேல்முறையீட்டாளர்
14-11-2022

இணைப்புகள்

1. Copy of Plaint in O.S.116/2019
2. Copy of unnumbered plaint in O.S. /2022
3. Copy of Private Complaint
4. 05.10.1970 – Unregistered Sale Muchalika infavour of palanivel Goundar and Sengodu Goundar
5. 15.04.1997 – Deed of Possession in Punjai Tharisu infavour of Settiya Goundar
6. Kist receipt infavour of plaintiff's father Palanivel Goundar
7. 13.08.1983 - Kist receipt infavour of plaintiff's mother Palaniyammal
8. 22.01.2000- Kist receipt infavour of the plaintiff
9. 25.03.2004- Kist receipt infavour of the plaintiff
10. 08.05.2005- Kist receipt infavour of the plaintiff
11. 28.04.2019 – Police complaint copy
12. 10.06.2019 – Deed of release in Tharisu Land Muchalika
13. 11.06.2008 – Deed of release infavour of plaintiff
14. 26.06.2019- Commissioner report and plan in I.A.3/2019 in O.S.116/2019.
15. A Register for S.No.354
16. FMB Plan for S.No.354
17. 17.10.2022 Notice issued by the Revenue Inspector, Gangavalli under section 7 of Land Encroachment Act.
18. 22.10.2022 Objection filed by the Appellant No.7 notice.
19. Acknowledgement card.
20. 01.11.2022 – Eviction notice issued by the Thasildhar, Gangavalli under section 6 of Land Encroachment Act.
21. Patta issued in the name of Chinniyamooppan for S.No.354/2,5
22. Patta issued in the name of Subramaniya Goundar for S.No.354/8,10
23. Patta issued in the name of Subramaniya Goundar and others for S.No.354/11
24. 'A' Register



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



60

**BEFORE THE DISTRICT COLLECTOR OF SALEM**

Na.Ka. No. / 2022

Chettiyannan @ Chettiya Gounder --- Appellant

/ Versus /

1. The Tahsildar, Gangavalli --- Respondents
2. The Revenue Inspector, Gangavalli

**STAY PETITION FILED BY THE APPELLANT** u/Sec.10-B of T.N. Land Encroachment Act.

The Appellant most humbly submits that,

The District Collector may kindly be pleased to pass an order to stay all further proceedings with regard to the eviction process relating to S.Nos.354/3, 4, 6 and thus render justice.

Attur Appellant Counsel for the Appellant

14.11.2022

DESCRIPTION OF PROPERTIES

சேலம் (கிழக்கு) பத்திரப்பதிவு மாவட்டம், கெங்கவல்லி பத்திரப்பதிவு துணை மாவட்டம், கெங்கவல்லி வட்டம், சேலம் மாவட்டம், நடுவலூர் கிராமம் கீழ்க்கண்ட சர்வே எண்களில் அமைந்துள்ள கீழ்க்கண்ட விஸ்தீரணமுள்ள தரிசு நிலங்கள் என வகைபாடு செய்யப்பட்டுள்ள அயன் புஞ்சை நிலங்கள் பூரா. ஷை நிலங்களில் அமைந்துள்ள தென்ன மரங்கள் மற்றும் தென்னங்கன்றுகள் பூராவும். அருகே உள்ள வாதியின் ச.எண். 353/15 பட்டா நிலங்களில் இருந்து நிலத்தடி PVC பைப் மூலம் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும் பாத்தியம் உட்பட பூராவும். ஷை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள மல்பரி, மரவள்ளிக்குச்சி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு மற்றும் தீவணப்புல் உள்ளிட்ட பயிர் வகைகள் பூராவும். பலன் தென்னை, மா, வாழை, மாதுளை, பப்பாளி, கொய்யா போன்ற மரவகைகள் பூராவும். சுமார் 15' அகலத்தில்

66

1



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



தரிசு நிலங்கள் வழியாக பட்டா நிலங்களுக்கும் மாட்டுப்பட்டி மற்றும் குடியிரு[illegible] வீடுகளுக்கும் செல்லும் வண்டிப்பாதையில் மனிதர்கள், கால்நடைகள், வண்[illegible] வாகனாதிகள் போகவர ஏற்பட்டுள்ள மாமூல் வழிநடை வண்டித்தட பாத்தி[illegible] மற்றும் ஈஸ்மெண்ட் உட்பட பூராவும்.

| வ.எண் | வகைபாடு | சர்வே எண். | விஸ்தீரணம் | தீர்வை |
|---|---|---|---|---|
| 1. | அயன் புஞ்சை தரிசு | 354/3 | ஏக். 0.38 (0.15.5) Hec | ரூ.0.60 |
| 2. | அயன் புஞ்சை தரிசு | 354/4 | ஏக். 0.13 (0.05.5) Hec | ரூ.0.20 |
| 3. | அயன் புஞ்சை தரிசு | 354/6 | ஏக். 0.40 (0.16.0) Hec | ரூ.0.60 |
| | | மொத்தம் | 0.91 cents | |

தாவா சொத்து நடுவலூர் கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டது.

Attur
14.11.2022

Appellant

Counsel for the Appellant



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



Track Consignment

62

Sign In Register

हिन्दी

Azadi Ka Amrit Mahotsav

You are here Home>> Track Consignment

Quick help

## Track Consignment

• indicates a required field.

• Consignment Number

RT602142643IN

Track More

| Booked At | Booked On | Destination Pincode | Tariff | Article Type | Delivery Location | Delivery Confirmed On |
|---|---|---|---|---|---|---|
| Atur H.O | 14/11/2022 11:21:15 | 636001 | 130.00 | Registered Letter | Salem H.O | 15/11/2022 16:22:37 |

**Event Details For : RT602142643IN**

**Current Status : Item Delivery Confirmed**

| Date | Time | Office | Event |
|---|---|---|---|
| 15/11/2022 | 16:22:37 | Salem H.O | Item Delivery Confirmed |
| 15/11/2022 | 08:02:09 | Salem H.O | Out for Delivery |
| 15/11/2022 | 06:58:42 | Salem H.O | Item Received |
| 15/11/2022 | 04:45:54 | Salem RMS L1R | Item Dispatched |
| 15/11/2022 | 00:03:15 | Salem RMS L1R | Item Bagged |
| 14/11/2022 | 20:46:38 | Salem RMS L1R | Item Received |
| 14/11/2022 | 17:46:09 | Atur H.O | Item Dispatched |
| 14/11/2022 | 17:41:17 | Atur H.O | Item Bagged |
| 14/11/2022 | 11:21:15 | Atur H.O | Item Booked |

Home
About Us
Forms
Recruitments
Holidays
Feedback
Right To Information

भारतीय डाक
India Post

RT602142643IN IVR:828460214264
RL ATUR H.O <636102>
Counter No:1,14/11/2022,11:21
To:THE DIST COLLECTOR,SALEM
PIN:636001, Salem H.O
From:M N NATESAN ,ADV
Wt:430gms
Amt:130.00(Cash)
<Track on www.indiapost.gov.in>

68



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



4. Learned counsel submits that the stay petition is pending without any orders having been passed and the writ petitioner is under pain of dispossession/demolition and that has necessitated the captioned writ petition.

5. Issue notice.

6. Mr.T.K.Saravanan, learned Additional Government Pleader accepts notice for all three respondents and submits, on instructions, that the afore-referred statutory appeal and stay petition are under active consideration of R1 (Appellate Authority) and that the afore-referred stay petition dated 14.11.2022 will be disposed of by R1 on its own merits and in accordance with law as expeditiously as the business of R1 permits but in any event within four weeks from today i.e., on or before 04.08.2025.

7. Though obvious, we make it clear that R1 shall dispose of the afore-referred stay petition on its own merits and in accordance with law. The order so made on or before 04.08.2025 shall be served on the writ petitioner under due acknowledgement within 7 working days. Coercive action (if any and if that be so) shall obviously be subject to and depending on the outcome of the stay petition. If the order is adverse to the writ



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



petitioner, it will be kept in abeyance for a fortnight to enable the writ petitioner to seek judicial review, if so advised and if so desired.

8. If the order is in favour of the writ petitioner, that will be curtains on the matter. If it is adverse to the writ petitioner and kept in abeyance for a fortnight and if the writ petitioner does not seek judicial review of the order under Section 10-B petition, consequences will follow.

9.Captioned WP disposed of in the aforesaid manner. As we have made it clear that coercive action (if any and if that be so), will be subject to the outcome of the stay petition with a rider to keep in abeyance, if it is adverse to the writ petitioner, captioned WMP has become otiose and the same is disposed of as closed. There shall be no order as to costs.

**[M.S., J.]** **[H.C., J.]**
**07.07.2025**

Index : Yes / No
Neutral Citation : Yes / No
Speaking order / Non-speaking order
gpa



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



To

1. The District Collector
   Salem District, Salem

2. The Tahsildar
   Gangavalli Taluk, Salem District

3. The Revenue Inspector
   Gangavalli, Gangavalli Post & Taluk
   Salem District



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**M.SUNDAR, J.**
and
**HEMANT CHANDANGOUDAR, J.**

gpa

**W.P.No.30891 of 2022**

**07.07.2025**



https://www.mhc.tn.gov.in/judis